ரூபாய் செலவில் 250 சிற்றுந்துகளை Small Bus—*களை வழங்கி இருக்கின்ற, பொற்கால ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த* Small Bus-*களோடு, நீலகிரி மாவட்டத்திற்கு மட்டும், மலைப் பகுதி மக்களுடைய தேவைகளை அறிந்து, 8 புதிய வழித்தடங்களில் பேருந்துகளை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இயக்க ஆணையிட்டு, இன்று முதல் இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அந்த வழித்தடத்தில் பயணிகளுடைய எண்ணிக்கைக்கேற்ப பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 496, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

496—

குடமுழுக்கு

***21313—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, குழித்துறை அருள்மிகு மஹாதேவர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, குழித்துறை அருள்மிகு மஹாதேவர் திருக்கோயிலுக்கு மாண்புமிகு இதய

TRUTH ALONE TRIUMPHS

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 2002 ஆம் ஆண்டு ஆட்சிக்காலத்தில்தான் குடமுழுக்கு நடைபெற்றது. ஆகம விதிகளின்படி, 12 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில், மீண்டும் குடமுழுக்கு விழா நடத்த திட்டமிட்டு, தற்போது 80,000 ரூபாய் மதிப்பீட்டில் மின் வாரியப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. திருக்கோயில் மற்றும் மண்டபம் பழுதுபார்த்தல், செப்பனிடுதல் ஆகிய பணிகளை திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர்கள் பங்களிப்புடன் செய்திட 8,20,000 ரூபாய் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அத்திருக்கோயில் திருப்பணி விரைவில் செய்து முடிக்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 2014 ஆம் ஆண்டு, குடமுழுக்கு நடத்தப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழித்துறை மஹாதேவர் ஆலயம் 700 ஆண்டுகள் பழமைவாய்ந்த கோயிலாகும். இந்தக் கோயில் வளாகத்தில் அருள்மிகு ஸ்ரீசாமுண்டீஸ்வரி அம்மன் கோயில் உள்ளது. இக்கோயில் கேரளாவுடன் இணைந்திருந்த காலத்தில், திருவிதாங்கூர் ராஜ்யத்தின் தலைநகராக, தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பத்மநாபபுரம் விளங்கியது. மஹாராஜா காலத்தில் பத்மநாபபுரம் கோயிலில் நவராத்திரி விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. தற்போது, நம் தாய் தமிழகத்துடன், குமரி மாவட்டம் இணைந்த பிறகு, நவராத்திரி விழா திருவனந்தபுரத்தில் உள்ள பத்மநாபபுரம் சுவாமி கோயிலில் நடைபெறுகின்றது. திருவனந்தபுரத்திற்கு குமரி மாவட்டத்திலுள்ள சுசீந்திரம் கோயிலிலிருந்து முன் உதித்த நங்கை அம்மன், குமார கோயில் முருகன், பத்மநாபபுரம் சரஸ்வதி அம்மன் ஆகிய சாமி சிலைகளையெல்லாம் ஒவ்வோர் ஆண்டும் நவராத்திரி விழாவின்போது ஊர்வலமாக எடுத்துச் சென்று வரும் வழக்கம் இருந்துகொண்டிருக்கிறது. போய் வரும் வழியில் குழித்துறை மஹாதேவர் ஆலயத்திலும் மற்றும் ஸ்ரீசாமுண்டீஸ்வரி ஆலயத்திலும் இரண்டு நாட்கள் தங்கிச் செல்லும் வழக்கமும் இருக்கின்றது. சாமி சிலைகளுடன் வரும் அர்ச்சகர்கள், மேளம், நாதஸ்வரக் கலைஞர்கள், வாகனம் சுமப்பவர்கள், கோயில் பிற

2013 மே 14]

பணிகள் செய்யும் சிப்பந்திகள், காவலர்கள் 100 பேருக்கும் மேலாக இங்கே வந்து தங்கிச் செல்வதற்கு சரியான தங்கும் வசதி இல்லையென்பதால், அவர்கள் தங்கிச் செல்ல தங்கும் விடுதி ஒன்றும், மண்டபமும் அமைத்துத்தர அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல், அந்தத் திருக்கோயிலில் இடம் இருக்குமாயின், அங்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கைக்கேற்ப, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் கருணையான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 497, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

497—

புதிய வட்டம்

***28114—திரு. கடம்பூர் ராஜு:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, கயத்தாரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?